(டாக்டர். எச். பி. ஹ்ண்டே)

வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படும். மதுரை மாநகராட்சி மற்றும் தொழில் நிறுவனங்களில் எடுத்துள்ள நடவடிக்கைகள் முன்னேற்றம் குறித்து தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவை முன் வைத்துள்ள அறிக்கையில் வைகை நதியினுடைய தென் புறமும், வட புறத்தில் இருக்கின்ற தொழிற்சாலைகளிலிருந்து வருகின்ற கழிவு நீர் வைகை நதியில் கலக்கிறது என்பதை ஏற்றுக்கொண்டு உள்ளார்கள் அது மட்டும் அல்லாமல், ஆற்றில் விடப்படுகின்ற அந்த கழிவு காரணமாக நிலத்தடி நீர், மற்றும் நீர் நிலைகளில் மாசு ஏற்படுகிறது என்று சொல்லி யிருக்கிறார்கள். எனவே இந்த நிலையை போக்க ஏற்கனவே கழிவு நீரை இந்த வைகை ஆற்றில் விடுகின்ற தொழிற்சாலைகள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன் மேலும் அப்படி இதுவரை எவ்வளவு தொழிற்சாலைகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் 3 பகுதிகள் இருக்கின்றன. (Madurai Corporation, Industrial Units of Dairy Development Corporation Dyeing Units) என்று 3 பகுதியாக இருக்கின்றன. இதிலே (Dyeing ueit Dairy Co po ati n, Madu ai Co po ation) பொறுத்த வரையில் நாம் உடனடியாக (Effluents) ஐ-சுத்திகரித்து வெளியே அனுப்ப வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அதற்கு கொஞ்சம் அவகாசம் கொடுத்து இருக்கிறோம் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை? நோட்டீஸ் கொடுக்கப்படும்.

Madurai Corporation Industrial Units of Dairy Devel pment Corporation) இப் பகுதிகளைப் பொறுத்த வரையில் மதுரை கார்ப்பரேஷனுக்கு கடிதம் எழுதியிருக்கிறோம். அந்த கார்ப்பரேஷன் அதை சுத்திகரித்த பிறகு தான் வெளியே கழிவு நீரை விடவேண்டும் என்றுசொல்லியிருக்கிறோம். அவர்களிடமிருந்து பதிலை எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறோம்.

(36) சேலம் ஆத்தூரில் ஏற்பட்ட லாரி விபத்து.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், ஆத்தூரில் ஒரு பீடா கடைக்குள் லாரி புகுந்ததால், ஸ்தலத்திலேயே இரண்டு பேர் இறந்தும் பலபேர் காயம் அடைந்ததால் அப்பகுதி மக்களிடையே ஏற்

பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

1986 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 21ஆம் நாளன்று சுமார் பிற்பகல் 12-15 மணியளவில் ஆத்தூர் கடலூர் சாலையில் ஆத்தூர் நகரில் அம்பேத்கார் காலனி அருகில் டி. என்.ஜே. 5137 எண்ணுள்ள லாரி ஒரு தையற்கடையும், முடி திருத்தும் நிலையமும் அமைந்துள்ள ஒரு கொட்டிலில் மோதியதால் விபத்து ஏற்பட்ட இடத்திலேயே இருவர் இறந்தனர். 7 பேர் காயமடைந்தனர். இறந்தவர்களில் ஒருவர் ராஜி என்னும் 18 வயது நிரம்பியவர். இவர் செஞ்சி என்ற தையற்காரனின் மகன் ஆவார். இவர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர். மற்றவர் 22 வயது நிரம்பிய ஜெயராமன் என்பவர் ஆவார். இவர் சூரன் என்ற தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவரின் மகன் ஆவார். காயமுற்றவர்களில் ஐந்து நபர்கள் ஆத்தூர் அரசு மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் நிலைமை சீராகி வருகிறதென்று கூறப்பட்டுள்ளது. காவல் துறையினர் இந்த விபத்து சம்பந்தமாக வழக்கு பதிவு செய்துள்ளனர். லாரி ஓட்டுநரை நீதி மன்றம் பிணையத்தில் விடுவித்துள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த லாரிகளை இரவு நேரங்களில் ஓட்டுகிற சில டிரைவர்கள் உழைப்பின் காரணமாக குடித்துவிட்டு லாரியை ஓட்டுகிறார்கள். ஆகவே குறிப்பிட்ட நேரத்திற்கு பிறகு லாரியை ஓட்டக் கூடாது என்று அரசு தடை விதிக்குமா? இப்படிக் குடித்துவிட்டு லாரியை ஓட்டுவதால் ரோடு எது, வீடு எது, கடை எது என்று தெரியாமல் ஓட்டுவதில் இந்த மாதிரி விபத்துகள் ஏற்படுகின்றன. ஆகவே குறிப்பிட்ட நேரத்திற்கு மேல் இரவில் லாரிகளை ஓட்டுவதற்கு தடை விதிக்கப்படுமா? இந்த விபத்தில் இறந்த குடும்பத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிவாரண நிதியிலிருந்து உதவி கொடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விபத்தைப் பொறுத்தவரையில் காயம் அடைந்தவர்கள் 5 நபர்கள். அவர்கள் ஆத்தூர் அரசு மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்

டாக்டர் எச். வி. ஹ்ண்டே

கள். இவர்கள் நிலைமை சீராகி வருகிறது என்று நமக்குத் தகவல் கிடைத்து இருக்கிறது. குடித்துவிட்டு ஓட்டுவதைப் பற்றி சொன்னார்கள். அதற்கு Alcohal Test என்ற முறையில் எந்த லாரி டிரைவராக இருந்தாலும் அவர்கள் குடித்து விட்டு ஓட்டுகிறார்கள் என்று போலீசார் புகார் கூறுவார்களானால் அவர் களை உடனடியாக மருத்துவ மனையில் டெஸ்டு மூலமாக அவர் குடித்து இருக்கிறார் என்றால் "He is suffering from intoxication. He has taken Alcohol". என்ற 2 பிரிவுகளாக பிரித்து அதற்கு உரிய தண்டனை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. மருத்துவ மனைக்கு அவர்களை அழைத்துக்கொண்டு போய் டாக்டர்கள் பரிசோதனை செய்து அவர்கள் ஆல்கத்கால் எடுத்து இருக்கிறாரா குடித்து இருக்கிறாரா என்பதை தெரிந்து கொள்ள டாக்டர்களால் முடியும். அப்படிப் பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறோம்.

(37) சென்னை, 44 ஆவது வட்டம் டாக்டர் அம்பேத்கார் நகரில் டான்பாஸ்கோ ஸ்தாபனம் கட்டிவரும் வீடுகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் பரிதி இளம் வழுதி, சு. பாலன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. சு. பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, "சென்னை 44-வது வட்டம், டாக்டர் அம்பேத்கார் நகரில் குடிசை மாற்று வாரியம் சுமார் 380 குடும்பங்களுக்கு பட்டா வழங்கி, மாதம் ரூ. 10 அடிப்படை வசதிக்காக வசூல் செய்கிறது. அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க மாநகராட்சி, எம்.எம்.டி.ஏ., மற்றும் குடிசை மாற்று வாரியம் ஆகியவை திட்டம் தீட்டி ஒரு மத சார்புள்ள தனியார் ஸ்தாபனத்திடம் ஒப்படைத்து, அவர்களால் ஒரு சில வீடுகள் கட்டப்பட்டு, அவை தரமானதாக இல்லை என அரசுக்கு புகார் செய்து, மேற்கொண்டு கட்டுவது நிறுத்தப்பட்டது. தற்போது அதே ஸ்தாபனம் அப் பகுதியிலுள்ள காலி இடங்களை தன் வசமாக்கி, மதில் சுவர் எழுப்பி, தனக்கென சில கட்டிடங்களைக் கட்டி வருகிறது. இவ் வாறு மேற்கொண்டு வீடுகள் கட்டிக் கொடுக்காமல், காலி இடங் களைக் கைப்பற்றி தனிக் கட்டிடங்கள் கட்டப்படுவதால்வெள்ளம், தீ விபத்து போன்ற நேரங்களில் அப் பகுதி வாழ் மக்கள் பாதிக்கப் படும் நிலை குறித்த " அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சரின் னத்திற்குக் கொண்டு வருகிறேன்.